**தலைப்பு 279 – கேகாலை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 279 - கேகாலை மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுப் கொள்கைகளுக்குரிய தகவல் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் எனது கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வாகனங்களில் அரசின் மதிப்பீட்டினை விட ரூபா 109,348,000 தொகை குறைத்து நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரக கணக்குககள் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டலின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டிய சொத்தொன்று மீள் மதிப்பீட்டுப் பெறுமதி சிகாஸ் கணனி முறைமையில் நாளது வரையாக்க முடியவில்லை. | கணக்க்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | கட்டிடங்களில் அரசின் மதிப்பீட்டினை விட ரூபா 498,547,787 தொகை கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாட்டிற்கு காரணங்களை தெளிவு படுத்துவதற்காக அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி -. |
| (iii) | இணையத்தள இணைப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 28,944,592 ஆன உபகரணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு குறிப்பு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி -. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 23,600,000 பெறுமதியான காணியொன்று மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | கண்டி கச்சேரியில் இருந்து உரிய விபரங்கள் கிடைத்த பின்னர் சமர்ப்பிக்கலாம் | - மேற்படி -. |

(ஆ) **கணக்காய்வு சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யட்டியன்தொட்ட பிரதேச செயலகத்தின் காணி ரூபா 17,700,000 என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் உரித்து தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை உறுதிப்படுத்துவது ஆவணங்களை கண்டு பிடிக்க முடியாமல் இருந்தது. | சொத்துக்களின் உரித்து உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டினை பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022/2023 பெரும் போக்கில் நெல் கொள்வவனவு செய்வதற்காக கிடைத்த ரூபா 8,222,000 ஆன நிதி ஏற்பாட்டில் இருந்து ரூபா 2,915,598 தொகை சேமிக்கப்பட்டு இருந்தது. இதற்காக வேறு செலவினங்களை மேற்கொள்ள முடியுமான இருந்ததால் உணவு பானங்கள் மற்றும் உபசரிப்பு செலவினங்களுக்காக ரூபா 232,487 தொகையும் எரிபொருள் எழுதுகருவிகள் மற்றும் பிரயாணச் செலவினமாக ரூபா 396,950 தொகையும் செலவிடப்பட்டு இருந்தது | போக்குவரத்துச் செலவினத்தை மேற்கோள்ள முடியாமையால் பணம் சேமிக்கப்பட்டது | நிதி ஏற்பாட்டை உச்சளவில் பயன்படுத்தப்பட வேண்டும் |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

| | அவதானிப்பு சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | 1641 | | அரசிற்கு சொந்தமான 20 வாகனங்கள் அளவில் மாவட்ட செயலாளரின் உத்தியோகத் விடுத்தி வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | மேவுகை ஒன்றை அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | 2021 செப்டம்பர் 29 ஆம் தேதி ஒன்று 1/2021-ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ரூபா 30,004,458 | 04 பிரதேச செயலகங்களில் 19 ஒப்பந்தங்கள் பிரதேச செயலாளரால் பெயரிடப்பட்ட நபர்களில் குழுவொன்றின் மூலம் தெரிவு செய்யப்படாமல் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | இக்குறைபாட்டை எதிர்காலத்தில் சீராக்கி நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணி கையேற்பிற்காக 11 பிரதேச செயலகங்களுக்கு கிடைத்த ரூபா 9,303,465 ஆன வைப்புக்கள் கணக்கிற்கு செலவு வைக்காமல் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையாக இருந்த போதும் இதுவரை கையேற்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | நீதிமன்றத்தில் வழக்குகள் காணப்படுதல், நீதிமன்றத்தில் பணத்தை வைப்புச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல், கையொப்பமிடும் நடவடிக்கைகள் பூர்த்தியா காமை போன்ற காரணங்களின் பேரில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. | காணி கையேற்பு நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ''அருநலு சஹன'' கடன் திகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் 1274 சமூகமய அமைப்புகளுக்குஇடையே 973 அமைப்புகளுக்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அனைத்து சமுர்த்தி கூட்டங்களிலும் இது தொடர்பான அறிவூட்டல் வழங்கப்பட்டுள்ளது. | நுண்கடன் சிக்கல் காரணமாக இவ்வாறான கடன்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சமுர்த்தி இசுரு கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் வழங்கப்பட்ட கடன்களில் ரூபா 2,895,224 தொகை காலாவதியாக இருந்ததுடன் காணப்பட்ட அறவிட முடியாக் கடன் பெறுமதி ரூபா 15,154,541 ஆக இருந்தது இக்கடன்களை அறவிடுவதற்கு தெளிவான வேலை திட்டம் ஒன்று காணப்படவில்லை | கொரோனா தொற்று மற்றும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமை காரணமாக இதற்காக தாக்கமளித்திருந்தது. அதன் பிரகாரம் கடன் தவிர்ப்பு இடம் பெற்றுமை மற்றும் கடன் முறைப்படி அறவிடுவதில் சிக்கல் காணப்பட்டது. | கடன்களை அறவிடுவதற்கும் அறவிடமுடியாக் கடனை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | மாவட்டத்தில் 45 சமுர்த்தி வங்கிகள் மூலம் வழங்கப்பட்டிருந்த கடன்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 303,340,941 அறவிட முடியாக்கடன் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2023 ஆம் ஆண்டின் போது 59 சதவீதத்தால் அறிவிடமுடியாக் கடன் அதிகரித்து இருந்த போதும் அக்கடனை அளவிடுவதற்கு முறையான திட்டம் ஒன்று காணப்படவில்லை. | மேற்படி | மேற்படி |
| (ஈ) | 10 பிரதேச செயலக பிரிவில் 130 அங்கவீன ஓய்வூதிய நலனாளிகள் தொடர்பாக ஓய்வூதிய செயலாற்றல் தொடர்பான கிராம சேவையாளர் கைநூலில் 6.4 பந்தியின் பிரகாரம் கிராம சேவையாளர்களால் தனது பிரதேச செயலகத்திற்கு 03 மாதங்களுக்கு ஒருமுறை அறிக்கையிட்டு இருக்கவில்லை. | ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் மூலமும் இந்த அறிக்கை மாதிரி பத்திரம் ஒன்று அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | அக்கைநூலின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (உ) | ஓய்வூதியம் கூடுதலாக கொடுப்பனவை அறவிடுவதற்காக புதிய தகவல் முறைமை என்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதும் மாவட்டத்தில் ஓய்வூதியமாக கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 8,892,859 தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | மாதாந்த தவணையாக கூடுதலாக செலுத்தப்பட்ட நிதி ஓய்வூதியம் பெறுவோரிடமிருந்து அறவிடப்படுகின்றது | ஓய்வூதியத்தின் போது கூடுதலான கொடுப்பன வை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | 04 பிரதேச சேதங்களுக்குரிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை 06 பிரதேச செயலக பிரிவுகளில் 2023 ஆம் ஆண்டின் போது துஷ்பிரயோகங்களுக்கு | உத்தியோகத்தர்களை இணைப்பது தொடர்பாக தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தரவுமுறை யொன்றை தயாரிப்பதற்காக குறித்த உத்தியோகத்தர்களுக்கு | உத்தியோகத்தர்களை அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் இணைக்கப்பட வேண்டியதுடன் தரவு முறை ஒன்றை தயாரித்து அனர்த்த திட்டமிடலை |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளாக்கப்பட்ட சிறுவர்கள் எண்ணிக்கை 119 ஆகவும் அனர்த்தத்திற்கு உள்ளான சிறுவர்கள் எண்ணிக்கை 2155 ஆகவும் பாடசாலை செல்லாத மாணவர்களின் எண்ணிக்கை 63 ஆக இருந்த போதும் அனர்த்தத்திற்கு உட்பட்ட குழந்தைகளுக்காக 2023 ஆண்டின் தயாரிக்கப்பட்ட 55 இடர் திட்டமிடல் இருந்து திட்டமிடப்பட்ட 02 விடயங்களுக்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது அவ்வாறே இதற்காக தரவு முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. 36 பாதுகாப்பு திட்டங்கள் இருந்ததுடன் நிதி ஏற்பாடு கிடைக்காத திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாடு வழங்கப்பட உள்ளது | செயல்படுத்தப்பட வேண்டும் |
| (எ) | 2020 ஜூன் 11 ஆம் திகதிய 07/2020ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 3 பிரதேச செயலகங்களினால் வலது குறைந்த ஓய்வூதியம் பெறுவோருக்காக பொறுப்பேற்றல் உடன்படிக்கைக்கு உள்ளாகாமல் பொறுப்பாளர்கள் ஊடாக வலது குறைந்தவருக்கு ரூபா 5,160,711 தொகை கொடுப்பணம் செய்யப்பட்டிருந்தது. | முழுமையற்ற கோவைகளை இனங்கண்டு அவற்றை விரைவில் பூர்த்தி செய்வதற்கு குறித்து கொண்டுள்ளேன். | உரிய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | தேசிய ஒற்றுமை மற்றும் மீள் ஒழுங்கிற்கான அலுவலகத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் ஒவ்வொரு கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவிலும் இன ஒற்றுமை குழுக்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்டத்தில் அவ்வாறான 299 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை உருவாக்கப்பட்ட 274 சங்கங்களில் 125 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரிவுகளில் மக்களை ஒன்று சேர்ப்பது சிக்கலாக இருப்பதால் சங்கங்களை அமைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது பதிவு சான்றிதழ்களை அனுப்புவதற்கு சில தாமதங்கள் காணப்படுகின்றன. | ஒவ்வொரு கிராம செயலாளர் பிரிவிலும் நல்லிணக்க சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டிய வேண்டும் மற்றும் பதிவு செய்தல் வேண்டும் |
| (ஐ) | விதவை மற்றும் குடும்ப தலைவர் பெண்களின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் வறிய பெண்களுக்காக கடன் வழங்குதல் பிரதான நோக்கமாக இருந்த போதும் 05 பிரதேச செயலா பிரிவுகளில் மாத்திரம் ரூபா 1,020,000 ஆன கடன் வழங்கப்பட்டிருந்தது. | விதவை கடன் நிகழ்ச்சி திட்டத்திற்காக நிதியேற்பாடு 05 பிரதேச செயலங்களுக்காக மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | மாவட்டத்தை மேவுகை செய்யும் வகையில் நிகழ்ச்சி திட்டம் செயறபடுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | ஓய்வூதியம் பெறுவோர் மரணித்த தகவல்களை விரைவில் அறிக்கை இடுவதற்கு கிராம சேவையாளர்களால் நடவடிக்கை எடுக்காமையால் 5 பிரதேச செயலக பிரிவுகளில் மரணித்த ஓய்வூதியம் பெறுவோருக்காக செலுத்திய ரூபாய் 1,197,276 தொகையை அறவிடுவதற்கு இருந்தது | கிராம உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதிய சுற்றறிக்கை பிரகாரம் கிராம சேவையாளர்களை அறிவுறுத்தல் வேண்டும் |
| (ஓ) | கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 16 வது வாரத்தில் இருந்து போஷாக்கு படிகள் வழங்குதல் இந்நிகழ்ச்சி திட்டத்தின் நோக்கமாக இருந்த போதும் 9 பிரதேச செயலக பிரிவுகளில் 4193 கர்ப்பிணிகளுக்கு படிகளை வழங்குவதில தாமதம் 17 வாரங்கள் முதல் 34 வகையான கால வீச்சு எடுத்திருந்தது. | தாமதமாக விண்ணப்பித்தமையால் இந்த சிக்கல் உருவாகியிருந்தது | விரைவில் இப்படிகள் வழங்கப்பட வேண்டும் |
| (ஔ) | ருவன்வெல பிரதேச செயலகத்தின் மண் சரிவினால் இடம் பெயர்ந்தவர்களை குடியிருப்பதற்கு 09 ஏக்கர் காணி அவசர நடவடிக்கையாக கருதி 2014, 2017 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கையேக்கப்பட்டிருந்த போதும் அதில் பகுதிகளாக்கப்பட்ட 102 துண்டுகளில் 39 மாத்திரம் இதுவரை பகிர்ந்து அளிக்கப்பட்டிருந்ததுடன் 2024 பெப்ரவரி வரையிலும் இக்காணிக்காக உரித்து பரிசோதனை நடத்தப்பட்டு இருக்கவில்லை. | 2024 மே 20 ஆம் திகதி குறித்த கணிப்பீட்டை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கையேற்பு செயற்பாடு பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| (க) | 04 பிரதேச செயலகங்களில் சமுர்த்தி வங்கிகளால் செலுத்தப்பட்ட ரூபா 156,315,710 தொகை இதுவரை மீள் நிரப்பப்பட்டு இருக்கவில்லை. | திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்தும் சமுர்த்தி அதிகாரசபையிடமிருந்து தகவல்கள் கிடைக்கவில்லை. | விரைவில் மீள் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (கா) | புளத்கோபிட்டிய உணவு தயாரிப்பு கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,745,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் அக்காணயின் உரித்து சீராக இருக்கவில்லை. | இலங்கை தேசிய சர்வோதய தொண்டர் அமைப்பிடமிருந்து இணக்கத்தை தெரிவிக்கும் கடிதம் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுஇ | நிர்மாணிப்பதற்கு முன்னர் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.2 எதிர்பார்த்த விளைவு மட்டங்களை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மாவட்டத்தில் ரூபா 64,159,400 செலவிடப்பட்டு 28 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு இருந்த போதும் மூலப்பொருள் விலை மற்றும் மின்பட்டியல் அதிகரித்தமை, கேள்வி குறைந்தமை நவீன உபகரண வசதிகள் இல்லாமை போன்ற சிக்கல் பெயரில் நலனாலிகளின் வருமான நிலைமை ரூபா 30,000 முதல் ரூபா 10,000 ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டதால் எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை அடைந்து கொள்ள முடியவில்லை | இணங்குகிறேன். வருமான நிலமையை அதிகரிப்ப தற்காக மீண்டும் நேரடி முறைமைகளை பயன்படுத்த உள்ளோம். | நடைமுறைகளை தயாரித்து வருமான நிலைமையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மகளிர் சுழற்சி கடன் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட 621 மகளிர் சங்கங்களில் 120 சங்கங்கள் செயலற்று இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் 21468 உறுப்பினர்களில் இருந்து 92 பேருக்காக மாத்திரம் ரூபா 1,020,000 ஆன கடன் வழங்கப்பட்டிருந்தது. காலாவதியான ரூபா 604,317 ஆன நிலுவை கடன் மீதியும் காணப்பட்டது. | சங்கங்களை முன்னுரிமைப்படுத்தும் வேலைத்திட்டமொன்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் செயலற்ற சங்கங்களை செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்து உள்ளேன். | அதிக அங்கத்தவர்களுக்கு கடன் வழங்குதல் மற்றும் நிலுவை மீதிகளை அறவிடப்பட வேண்டும். |

## 3.3 எதிர்பார்த்த நலன்களை (Outcome) பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ருவன்வல்ல பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டு இயற்கை விபத்துகள் காரணமாக புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு பணம் வழங்கப்பட்டிருந்த போதும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாததன் பேரில் 13 வீடுகளுக்காக மேலும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 4,485,000 ஆக இருந்ததுடன் அதில் 5 வீடுகளில் வீடு பெறுனர்கள் குடியிருக்கவில்லை | போதிய அளவு நிர்மாணம் மேற்கொள்ளப்படாததால் எஞ்சிய தவணைத் தொகை கொடுப்பனவு செய்யப்படவில்லை | பகுதியாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஊக்குவித்தல் மற்றும் குயிருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மாவனெல்ல பிரதேச செயலகத்தின் பதவியணியினரின் உடற் தகுதியை ஏற்படுத்துவதற்காக ரூபா 1,993,000 தொகை செலவிடப்பட்டு உடற்பயிற்சி நிலைய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக எந்த ஒரு திட்டமும் இல்லாத இருந்ததுடன் கட்டிடத்தில் போதியளவு பகுதிகளும் பயன்பாடற்று காணப்பட்டன. | எழுத்திலான பயிற்சி திட்டமொன்றும் வேலைத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை விளைவற்ற வகையில் வைத்திருக்க கூடாது. |
| (இ) புளத்கொஹுபிட்டிய அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் குடியிருப்பவர்களுக்கு வீடுகளை வழங்கியிருந்த போதும் அவர்கள் அந்த அதிக ஆபத்தான பிரதேசங்களில் குடியிருத்தமையால் ரூபா 24,070,000 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட 26 வீடுகள் பயன்பாடற்று காணப்பட்டன. அதிக ஆபத்துடைய வீடுகளை உடைத்து அகற்றாமை அதற்கான காரணங்களாக இருந்தன. அவ்வாறே பகுதி அளவில் வீடுகள் நிர்மானிப்பட்டிருந்தமையால் அதிக ஆபத்துள்ள வீடுகளில் குடியிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை 18 ஆக இருந்தது. | நலனாலிகள் மற்றும் அரசுடன் கடப்பாடு ஒன்று இல்லாத வகையில் உரித்து உறுதி அவர்களிடம் காணப்பட்டதே இந்த அனைத்து சம்பவங்களுக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | சொத்துக்களை விளைவற்ற வைத்திருக்க இடம் அளிக்கக் கூடாது மற்றும் அதிக அபாத்துள்ள வீடுகளை அகற்ற வேண்டும் |

### 3.4 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடல்.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுற்றுலா கவர்ச்சிகரமான பொருளாதார பயிர் உற்பத்தி கொத்தணி கிராமம் செயற்திட்டத்திற்காக ரூபா 1,519,301 ஆன நிதி ஏற்பாடு கேகாலை பிரதேசத்திற்கு கிடைத்திருந்த போதும் தேவையான நாற்றுக்கள் நாற்று மேடைகளில் இல்லாத காரணத்தினால் அச்செயற்திட்டம் செயலற்று காணப்பட்டது. | நாற்றுக்கள் கிடைக்காமையால் அந்நிதி ஏற்பாடு கலிகமுவ, உள்நாட்டு கிழங்கு மற்றும் சேதன பசளை உற்பத்தி கிராமத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டது. | நிதி ஏற்பாடு உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்தின் உணவுகளை பொதி செய்வதற்காக இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,562,500 ஆன நிதி ஏற்பாடு | கேள்வி விதந்துரைகள் எதிர்பார்த்த விதந்ததுரைகள் மற்றும் பொருந்தாமை உட்பட நிதி ஏற்பாட்டு வரையறை மிகைத்து | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருந்த போதும் குறித்த விதந்துரைகளுக்கு பொருந்தும் வகையில் உணவு தயாரிப்பு இயந்திரம் ஆண்டு கிடைக்காமல் அடிப்படையில் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை | சென்றமை போன்ற விடயங்கள் அதற்கான காரணங்களாக இருந்தன | |
| (இ) | பிரதேச செயலகங்களில் ஈ சனத்தொகை பதிவேடுகள் நிகழ்ச்சித்திட்டத்துக்காக ரூபா 262,000 ஆன 2 பிரிண்டர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் கணினி பெற்றுக் கொள்ளப்படாமை காரணமாக அச்செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டினுள் செயற்படுத்தப்பட வில்லை. | குறைபாடுகள் காணப்பட்ட போதும் உள்ள வளங்களை பயன்படுத்தி 11 பிரதேச செயலகங்களிலும் இந்நிகழ்ச்சி திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகின்றது. | - மேற்படி - |
| (ஈ) | கேகாலை நகரத்திற்காக பல்கலைக்கழகம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 61,029,229 தொகை செலவிடப் பட்டிருந்தது. பின்னர் அந்நிர்மாணம் பூர்த்தியற்றதாக இருக்கையில் அனைத்து நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தது. | நகர பல்கலைக்கழக நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தாமை உரிய அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும். | சொத்துக்களை விளைவற்ற வகையில் வைத்திருப்பதற்கு இடமளிக்கக் கூடாது |
| (உ) | தெஹியோவிட்ட ஹத்தானகல தமிழ் பாடசாலையின் நிர்மாணம் கைவிடப்பட்டு கிடைத்த தொகையில் ரூபா 14,202 செலவிடப்பட்டு எஞ்சிய ரூபா 1,434,415 தொகை திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரர் விலகியமை மற்றும் காணப்பட்ட சீரற்ற காலநிலை நிலைமையால் அதனை வேறொருவருக்கு கையளிப்பதற்கு முடியாமையால் நிதி ஏற்பாடு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது | நிதி ஏற்பாடுகளை குறைப் பயன்பாட்டுக்கு உட்படுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய மாவட்ட செயலக கட்டிட நிர்மாணத்திற்காக 2011 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 243,993,402 செலவிடப்பட்டிருந்தது. எனினும் நிர்மாணத்தின் செயல் முன்னேற்றம் 88 சதவீதமாக இருந்தமையால் எதிர்பார்த்த நோக்கங்களை இதுவரை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. | எதிர்பார்த்த நோக்கங்களில் அதிக அளவு இதுவரை அடையப்பட்டுள்ளதுடன் எஞ்சிய மாடிக்காக நிதி ஏற்பாடு கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் வீண் விரயத்துக்கு உட்படுத்த கூடாது |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்டத்தில் 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை அதிக ஆபத்தின் பேரில் மீள்குடியேற்றப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை 727 ஆக இருந்த போதும் அதில் மாற்று குடியிருப்பதற்கு விருப்பு தெரிவிக்காத குடும்பங்களின் எண்ணிக்கை 97 ஆக இருந்ததுடன் எவ்வித பொறுப்பேற்றலை தெரிவிக்காத குடும்பங்கள் எண்ணிக்கை 274 ஆக இருந்தது. எஞ்சிய 356 குடும்பங்களில் காணி துண்டுகள் வழங்கியுள்ள மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்காக காணியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 186 ஆக இருந்ததுடன் எஞ்சிய 170 குடும்பங்களுக்காக 2024 மார்ச் மாதம் வரை காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கிடைத்த ரூபா 442,158,320 ஆன நிதி ஏற்பாடுகளில் ரூபா 255,677,591 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | இதில் குறிப்பிடப்பட்ட 170 என்ற பெறுமதியில் வீடுகளுடன் கூடிய காணிகளைக் கொள்வனவு செய்த நலனாலிகளின் எண்ணிக்கை 29 ஆன பெறுமதி கழிக்கப்பட வேண்டியவுடன் 141 நலனாலிகளிக் அளவு இச்செயற்திட்டத்தில் மாற்றுச் சந்தர்ப்பங்களுக்கு இடையே தான் தெரிவு செய்த மாற்று சந்தர்ப்பம் தொடர்பாக நிரந்தர தீர்மானம் ஒன்றை வழங்காததன் அடிப்படையில் எவ்வித சந்தர்ப்பங்களுக்காக உள்ளடக்கப்படாத இருந்ததுடன் அடுத்த தவணைத் தொகையை பெற்றுக் கொள்ளாத கொள்ளாமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | குடியேற்றத்தை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | மண் சரிவினால் இடம் பெயர்ந்து மீள் குடியேற்றப்பட்ட 22 காணிகளுக்காக நீர் செயற்திட்டத்திற்காக ரூபா 44,494,206 ஆன மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதும் அவை செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | கேகாலை நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை மூலம் செயற்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது | இடம்பெயர்ந்தவர் களுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**3.6 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றத்தை அடைந்திராத செயற்திட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புகையிலை மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு கொடி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்து எஞ்சிய ரூபா 7,479,433 தொகை சமூக அமைப்பு அங்கத்தவர்களின் சமூக நலன்புரி நடவடிக்கை களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் | திட்டம் ஒன்றைத் தயாரித்து அதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொண்டு அத்தொகையை உரிய செயற்திட்ட முன்மொழிவினை செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கிடைத்த பணத்தை அபிவிருத்திக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் திட்டம் ஒன்று இல்லாமையால் அத்தொகை விளைவற்று காணப்பட்டது. | | |
| (ஆ) | கிராமசக்தி நுண் நிதி கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டிருந்த 130 சங்கங்களில் 2023 டிசம்பர் வரையில் 119 சங்கங்கள் செயலற்று காணப்பட்டன நுண் நிதிய கணக்கிலும் சுழற்சி மற்றும் செயலற்ற அனைத்து சங்கங்களின் கணக்குகளிலும் காணப்பட்ட ரூபா 60,004,996 ஆன மீதி விளைவற்று காணப்பட்டதன் பேரில் நிகழ்ச்சி திட்டம் வெற்றியளிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பணியகத்தினால் வழங்கப்பட்ட ஆலோசணையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிய தரப்பட்டுள்ளது. | செயலற்ற சங்கங்களை செயற்படுத்து வதற்கும் செயலற்ற கணக்கு மீதிகளை செயற்படுத்தும் வகையில் நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப் வேண்டும் |

### 3.7 பெறுகை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.8.3 மற்றும் 2.8.4(ஈ) 2.12 5.4.1 6.3.1 6.3.6 4.3.1 மற்றும் 2.8.4 வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட முறையே தொழில்நுட்ப மதிப்பிற்கு வெளிவாரி உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல், இரகசிய கூற்றைப் பெற்றுக்கொள்ளல், உடன்படிக்கை செய்வோர்களின் உரிமைகள், ஒப்பந்த வரைவில் குறிப்பிடப்படுதல், கேள்வி முத்திரையிடப்பட வேண்டுமென்ற அறிவித்தல், கேள்வி திறக்கும் அறிக்கைக்குரிய அங்கத்தவர்கள் கையொப்பமிடுதல், மொத்த கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு மாவட்ட பொறியியலாளர் மற்றும் மதிப்பீட்டை தயாரித்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமல் போன்ற விடயங்கள் பெறுகை செயற்பாட்டின் போது அநேக பிரதேச செயலகங்களினால் பின்பற்றப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்துமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.1(அ) இன் வழிகாட்டலுக்கு புறம்பாக காணி கையேற்கப் படாமல் ரூபா 3,262,974 ஆன கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | இக்கட்டிடத்தை சமுர்த்தி திணைக்களத்திற்கு கையேற்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்டத்தில் 107 கிராம சேவையாளர் அலுவலகங்கள் அரசுக்கு சொந்தமான காணியில் காணப்பட்ட போதும் காணியின் உரித்து சட்டரீதியாக கை கையேற்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தை கையேற்குமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளேன். | காணிகளின் உரித்தினைக் பொறுப்பேற்கப்பட வேண்டும். |
| (இ) | ருவன்வெல்ல பிரதேச செயலகத்துக்கு சொந்தமான 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 4,293,152 செலவிடப்பட்டு பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட 06 கட்டிடங்கள் 2023 ஆம் ஆண்டு வரை விளைவற்று காணப்பட்டன. | உள்நாட்டு அலுவலக அமைச்சிற்கு அறிவித்து உள்ள போதும் இதுவரை இது நிதிஏற்பாடு வழங்கப்படவில்லை. | சொத்துக்களை வீணாக வைத்திருக்க கூடாது. |

**3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புளத்கொஹுபிட்டிய பிரதேசத்தில் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,381,726 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட மாணாகழவத்த நீர் செயற்திட்டத்தின் மூலம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீரை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக தேசிய மக்கள் சமூக நீர் வளங்கள் திணைக்களத்திடம் இருந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்களை வீணாக வைத்திருக்க கூடாது. |
| (ஆ) | கேகாலை தீவல பிரிவில் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நீர் செயற்திட்ட நிர்மாணம் கைவிடப்பட்டமையால் அதற்காக ரூபா 1,733,622 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட நீர்தாங்கி விளைவற்று காணப்பட்டது. | முத்தரப்பு மின்சாரம் கிடைக்காமை மற்றும் நிதிஏற்பாடு குறைப் பயன்பாட்டினால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. | - மேற்படி - |
| (இ) | 08 பிரதேச செயலக பிரிவுகளில் பகுதி அளவில் பூர்த்தி செய்யப்பட்ட 12 சேவை இல்லங்கள் இரண்டு | நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்டு வேலைகளை பூர்த்தி | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக பயன்படுத்தாமல் காணப்பட்டமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 4,119,021 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது | செய்து பயன்பாட்டுக்கு எடுக்குமாறு குறித்த பிரதேச செயலாளர் அறிவிக்கப்பட்டுள்ளது | |

**3.10 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தரணியல பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ விடுதி ஆபத்தான நிலைமையில் காணப்பட்டது போதும் அதில் உள்ளக திருத்தங்களுக்காக ரூபா 1,942,177 தொகை செலவிடப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ விடுதி திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்வது அத்தியாவசியமாக இருந்ததால் அவ்வாறு செய்யப்பட்டது. | அரசின் நிதி உச்சளவில் பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலக புதிய கட்டிட நிர்மாணத்தின் போது கற்தூள் மற்றும் கிரவல் என்பவற்றிற்காக ரூபா 20,915,697 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் அவை எதுவும் அளவிடப்பட்டிருக்கவில்லை. | வெட்டி அகற்றப்பட்ட இடத்தின் அளவின் பிரகாரம் வேலை தளத்துக்கு எடுக்கப்பட்ட கற்தூள் மற்றும் கிரவல் அளவு கணக்கிடப்பட்டுள்ளது. | சம்பவ பதிவேட்டு புத்தகம் பேணப்பட வேண்டும். |
| (இ) | ருவன்வெல்ல உதவி பிரதேச செயலாளருக்கு வழங்கிய வாடகை வீட்டுக்காக தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.3.1 பிரவின் பிரகாரம் சம்பளத்திலிருந்து 10 ஆன ரூபா 264,272 அறவிடப்படா திருந்ததுடன் அது கணக்குகளிலும் வெளிப்படுத்தப்படவில்லை. | அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | 1979 இன் 43 ஆம் இலக்க காணி மானிய விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் எழுத்து மூலம் கையளிப்பு ஒன்று இல்லாமல் 2017 மார்ச் மாதத்தில் பிரதேச செயலாளருடன் இணக்கப்பாட்டு உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு ஏக்கர் காணி குத்தகை அறவீடு இல்லாமல் தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. | திருத்தச் சட்டம் வர்த்தமானியில் வெளியிடும் வரை எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது உள்ளது அதனால் வருடாந்த குத்தகை ஒன்று அற விடுவதற்காக மாகாண காணி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்தின் புதிய கட்டிட நிர்மாணத்தின் போது முறையான அங்கீகாரம் ஒன்று இல்லாமல் | நிச்சயமற்ற தொகையை உட்பட ஆகக் கூடிய தொகையை விட | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கை செய்த ஒப்பந்த தொகையை மிகைத்து ரூபா 881,611 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே 10 சதவீதத்தை விடக் கூடிய ரூபா 3,654,768 ஆன மேலதிக வேலைகள் பெறுகை செயற்பாட்டிற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறைந்த தொகையை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது அவ்வாறே பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதிய அளவு காலம் இல்லாத இருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2023 மே மாதம் முதல் 2024 ஏப்ரல் மாதம் வரை மாவட்ட செயலகம் உட்பட 11 பிரதேச செயலகங்களில் பாதுகாப்பு சேவை வழங்குவதற்காக ரூபா 12,067,174 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது எனினும் உடன்படிக்கைக்கு முரணாக 12 மணித்தியால பாதுகாப்பு சேவை நேரத்துக்கு பதிலாக 24 மணித்தியால சேவை நேர வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வாழ்க்கை செலவினம் அதிகரித்தமையால் பாதுகாப்பு கம்பனியின் இணக்கப்பாட்டுடன் சில சந்தர்ப்பங்களில் 24 மணித்தியால சேவை நேரத்தை செயற்படுத்தப்படுவதற்கு நேர்ந்வதாக கம்பனியால் எமக்கு வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டது. | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 11 பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தின் கட்டிட வளவினை சுத்திகரிப்பதற்காக ரூபா 5,506,135 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் பிற்பகல் 5 வகையான செயற்பாடுகளை நிறைவேற்றுதல், நாளொன்றுக்கு மூன்று முறை சுத்திகரிப்பினை மேற்கொள்ளுதல், அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மறைப்புக்களை வாரததிற்கு ஒரு முறை சுத்திகரித்தல், முற்றத்தை சுத்திகரித்தல் மற்றும் மாதத்துக்கு இரண்டு தடவை நிறுவனத் தலைவர்களின் செயன் முன்னேற்ற மீளாய்வு போன்ற உடன்படிக்கை நிபந்தனைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 பிரதேச செயலகங்களில் 117 பெண் உத்தியோகத்தர்கள் 1997 ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் ஒரே சேவை நிலையத்தில் தரித்து இருந்தனர். | அதற்காக பிரதேச செயலகங்களுடன் இடமாற்றம் வழங்குவதற்கு வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டின் பிரகாரம் இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்டத்தில் 04 நிர்வாக கிராம சேவை உத்தியோகத்தர்கள் பதவிகள் மற்றும் 99 கிராம சேவை உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. | கிராம சேவை உத்தியோகத்தர் நியமனம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளராக இருப்பதுடன் பதில் கடமை நியமனம் வழங்குதல் மாவட்ட செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் 149 வெற்றிடங்கள் 11 மிகையும் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்கு 1286 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பேர் இணைக்கப்பட்டிருந்தனர். | அரச கொள்கை தீர்மானத்தின் பேரில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | குறித்த பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 11 பிரதேச செயலக பிரிவுகளின் 573 கிராம சேவையாளர் பிரிவுகளில் 213 பிரிவுகளுக்காக நியமிக்கப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர்கள் 2009, 2014, 2013 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இருந்து ஒருவர் வீதமும் 2017 ஆம் ஆண்டிலிருந்து 05 பேரும் 2018 ஆம் ஆண்டு முதல் 45 பேரும் 2019 ஆம் ஆண்டிலிருந்து 74 பேரும் 2020 ஆம் ஆண்டிலிருந்து 21 பேரும் 2021 ஆம் ஆண்டிலிருந்து 70 பேரும் என்ற அடிப்படையில் இடமாற்ற கட்டளைகளுக்கு உட்படாமல் ஒரே பிரிவில் சேவை புரிந்து வருகின்றனர் | பிரதேச செயலக பிரிவுகளில் பிரிவுகளுக்கு இடையே இடமாற்ற வழங்கும் அதிகாரம் குறித்த பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக கவனம் செலுத்துமாறு பிரதேச செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | தேவைப்பாட்டின் பிரகாரம் இடமாற்றத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |